[illegible]

7

19-1-1935

N35.7.7
208723

956 சந்தா ரூ. 3 956 Regd. No. M. 2419.



# மாத்வ மித்திரன்.

# THE MADHWA MITRAN.

EDITOR:
**Adyam Bhagavatha Ranganathachariar,**
**KUMBAKONAM.**

8 FEB 1935

பௌர்ணமிதோறும் வெளிவரும்.



| Vol. 7 | பாவ ஸம்வத்ஸரம் | No. 7. |
|---|---|---|
| புஸ்தகம் 7 | புஷ்ய மாஸம். பௌர்ணமி (19–1–35) சனிவாரம். | நெ. 7. |





| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | தாத்பரிய நிர்ணயம் (மத்வாசாரியார்) | 193 |
| 2. | ஸ்ரீமத்வ விஜயம். | 201 |
| 3. | ஆசாரமாலை. | 205 |
| 4. | ஸ்ரீவாதிராஜஸ்வாமிகளின் சரித்திரம். | 209 |
| 5. | மகாலட்சுமி. | 211 |
| 6. | செய்தித்திரட்டு. | 217 |
| 7. | திருப்பதி சபையின்மீது தாவா. | 219 |
| 8. | கிரஹண உபவாஸம். | 222 |
| 9. | ஸ்ரீராகவேந்திரரின் மாகாத்மிய குறிப்புகள். | 223 |
| 10. | விசேஷதினங்கள். | 224 |



ஆசிரியர்:— ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

# கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான டாக்டர் பேரியாராவின் ஹூபிங் காப் ஸ்பெஸிபிக் இருக்கையில் 3மாதகாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள், ஓர் பாட்டில் ரூ 2—12—0

ஆஸ்த்மா க்யோர் இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து. ஓர் பாட்டில் ரூ 4—8—0

ஆண்டியாபிடின் இது நீரழிவை நிச்சயமாய் 6மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும். ஓர் டின் ரூ 4—12—0

ஆர்டருடன் ரூ 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்பவும்.

PEREIRA & Co., Chemists No. 13, Calicut. (S India).

## மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாஸமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாராய்ச் சேருங்கள். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும். எந்த மாதத்தில் சந்தாதாராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும். பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும். பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்

---

**மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம் தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.**

ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹாயநம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्य जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

### இருபத்து ஒன்றுவது அத்தியாயம்

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு.)

(காபிரைட், முன் 168-பக்கம் தொடர்ச்சி)

நாராயணன் ஒருவனே வசிஷ்டவம்சம், பிருகுவம்சம் விருஷ்ணிவம்சம் இவைகளில் வேதவியாஸர், பரசுராமர், கிருஷ்ணர் என்று மூன்று ரூபங்களுடன் அவதாரம் செய்திருக்கிறார். வியாஸருக்கும் பரசுராமருக்கும் முதற் பூஜையை செய்தால் அவர்கள் பிராம்மணர்களாதலால் ராஜர்கள் விரோதம் செய்யமாட்டார்கள். அவர்கள் பிராம்மணர்கள் தானே என்ற காரணத்தால் அவர்களை பூஜிப்பது நியாயமென்று அறிந்து கொள்கின்றனர். ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியை பூஜை செய்வதில் அரசர்களுக்கு எப்பேர்பட்ட விரோதம் சம்பவிக்குமோ, அப்பேர்ப்பட்டது வேதவியாஸர் பரசுராமர் இவர்களின் விஷயத்தில் இல்லை. அரசர்களின் விவாதம் ஏற்படாமலிருந்தால் ஸ்ரீ கிருஷ்ணருக்கு நாராயணர் என்ற பிரசித்தி ஏற்படாது. ஸ்ரீகிருஷ்ணருக்கு முதல் பூஜை நடந்தால் ராஜர்கள் நன்றாய் விவாதம் செய்வார்கள். கலகத்தால் ஸ்ரீகிருஷ்ணருடைய கீர்த்தி பரவும். ஆகையால் ஸ்ரீகிருஷ்

ணருக்கு முதற் பூஜை செய்யவேண்டுமென்று பீஷ்மாசாரியார் ஆலோசனை செய்தார். ராஜர்களின் விவாதம் ஏற்படுவதற்காக பாண்டவர்கள் எல்லா ஜனங்களின் எதிரில் ஸ்ரீகிருஷ்ணருக்கு அக்ர பூஜையைச் செய்தனர். ஸ்ரீகிருஷ்ணருக்கு பாண்டவர்கள் அக்ர பூஜையை ஸமர்ப்பணம் செய்தவுடன் சிசுபாலன் கோபங்கொண்டு ஸ்ரீகிருஷ்ணரை தூஷித்தான். வேதவியாஸரும், பரசுராமரும் ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து நிர்விசேஷமாய் தனிப்பட்டவர்களல்லவாதலால் ஸ்ரீகிருஷ்ணருக்குப் பின் அவர்களுக்கு பாண்டவர்கள் பூஜையைச்செய்தனர். பிறகு மற்ற பிரம்மாதிகளை அவரவர்களின் தாரதம்மிய கிரமப்படி பூஜை செய்தனர்.

## சிசுபால வதம்.

ஸ்ரீகிருஷ்ணருக்கு பாண்டவர்கள் அக்ர பூஜையை ஸமர்ப்பித்தவுடன் சிசுபாலன் கோபத்துடன் ஸ்ரீகிருஷ்ணரை நிந்தை செய்தான். அவைகளைக்கேட்டு பூரா கோபமுள்ளவராய் பீமசேனர் ஜகத்குருவான ஸ்ரீ கிருஷ்ணரை நிந்திக்கும் சிசுபாலனைக்கொல்வதற்காக அவனை எதிர்த்து வந்தார். தன் பின்னாடி கூட ஒருவர் விஷ்ணுவை நிந்தித்தாலும் அவருடைய நாக்கை ஸமூலமாய் இழுத்து கத்தரிப்பதாய் பீமசேனருக்கு வெகு திடமான ப்ரதிக்ஞை எப்பொழுதுமே உண்டு. அதன்படி பீமசேனர் புறப்படவும், கங்கா புத்திரரான பீஷ்மர், ஹே பீமசேன! விஷ்ணு தம் த்வாரபாலகர்களை தாமே கொல்வதாய் சொல்லியிருக்கிறார், என்று சொல்லி பீமசேனரை பிடித்துக்கொண்டார். நாராயணர் ஜயவிஜயர்களே! நீங்கள் என்னாலேயே கொல்லப்பட்டவர்களாய் ஆவீர்கள் என்று முன்னாடியே சொல்லியிருக்கிறார், என்று பீஷ்மாசாரியார் சொன்ன வார்த்தையைக்கேட்டு, அவர் தன் கையை பிடித்துக்கொண்டதால் பீமசேனர் நின்றார். பீமசேனர் பகவானுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்திருப்பினும் தன் பிரதிக்ஞையைக் காப்பாற்றிக்கொள்வதற்காக சிசுபாலனின் நாக்கை அறுக்க எழுந்தார். பீஷ்மர் தடுக்கவும், இவ்வளவு எத்தனம் செய்ததுதான் சரி, ஆனால் கொல்வது உசிதமாகாது, என்று எண்ணி முன்போல் கீழே உட்கார்ந்து விட்டார். இந்த பதினான்குலோகங்களையும் கொண்ட



மகா ஸபையில் ஸ்ரீகிருஷ்ணருக்கு நடந்த அக்ர பூஜா மகோற்சவத்தைப்பார்த்து தேவஸமூகத்தில் பிறந்தவர்களான ஸாது ஜனங்களுக்கு மனது சந்தோஷமேற்பட்டது. மத்யம மனுஷ்யர்களான நித்ய ஸம்சாரிகளுக்கு இதைப்பார்த்துவிட்டு ஸுகம் துக்கம் கலந்ததாயிற்று. ஸ்ரீகிருஷ்ணருக்கு அக்ர பூஜை செய்த விஷயத்தில் அஸுராம்சர்களான துரியோதனாதிகள் இந்த சபையில் விரோதங்கொண்ட புத்தியுள்ளவர்களாயினர். சிசுபாலன் உத்கிருஷ்டமான குணங்களுக்கு ஸமுத்திரரான ஸ்ரீகிருஷ்ணரை துஷ்ட வசனங்களால் அதிகமாய் நிந்தை செய்தான். ஸ்ரீகிருஷ்ணரை யுத்தத்திற்கு அழைத்தான். ப்ரபுவான ஸ்ரீ கிருஷ்ணர் அவனுடைய பாணத்தை சீக்கிரமே தடுத்து சக்ராயுதத்தால் அவனை ஸம்ஹரித்தார். கழுத்து அறுபட்டுப்போனவுடன் அந்த ஜயனென்ற துவாரபாலகன் ஸ்ரீகிருஷ்ணரிடம் பக்திமானாய் ஆனான். ஜயனை ஆசிரியித்திருந்த அஸுரன் அந்தம் தமஸ்ஸை அடைந்தான். ஜயன் இச்சமயம் ஸ்ரீகிருஷ்ணரை ப்ரவேசித்து, வைகுண்டத்திற்குப் போனபின் தன்னுடைய அம்சியாகிய ஜயனிடம் சேர்ந்து மறுபடியும் த்வாரபாலகனாய் ஆனான்.

## துரியோதனன் அவமானப்பட்டது.

இந்த ராஜஸூய யாகம் வேதத்தில் எப்படி சொல்லப்பட்டிருக்கிறதோ அதன்படி பாண்டவர்கள் அந்த யாகத்தை ப்ரவிருத்தித்தனர். எல்லா ராஜர்களும் அநேக ஸௌவர்ணம் ரத்னம் பாரங்களை உபாயனமாகக் கொடுத்தனர். அவைகளைப் பெற்றுக்கொள்ளும் காரியத்தில் தர்மபுத்திரர் துரியோதனனை ஆக்ஞாபித்தார். பாண்டவர்கள் பிராம்மணர்களுக்கு அவரவர்களின் இஷ்டப்படி பக்ஷ்ய போஜ்யங்களுடன் போஜனம் செய்வித்தனர். அநேக ஸௌவர்ண ரத்ன பாரங்களை தக்ஷிணையாகக் கொடுத்தனர். யார் யாருக்கு என்ன என்ன இஷ்டமோ அது எல்லாவற்றையும் அவரவர்களுக்கு பாண்டவர்கள் கொடுத்தனர். யக்ஞம் சம்பூர்த்தியானபின் பந்துக்களுடன் கூடிய பாண்டவர்கள் ஸந்தோஷம் நிறைந்தவர்களாய் அவபிருத ஸ்நானம் செய்தனர். தேவர்கள் உத்கிருஷ்டமான துந்துபி வாத்யங்கள் சப்திக்க, அப்

ஸரஸ்ஸுகள் நர்த்தனம் செய்து கொண்டிருக்க, பாண்டவர்கள் கங்கைக்குச் சென்று அங்கு அகமர்ஷண ஸ்நானம் செய்தனர். பாண்டவர்கள் எல்லா ராஜர்களுடன் கூடி கங்கையின் ஜலத்தில் ஸ்நானம் செய்து இந்திர பிரஸ்தத்திற்கு வந்து சேர்ந்தனர். பிறகு பிரம்மாதி தேவர்கள் அவரவர்களின் லோகங்களுக்குச்சென்றனர். எல்லா அரசர்களும் பீஷ்மாசாரியாரும் திருதராஷ்டிரனுடன் கூடிய எல்லா பந்துக்களும் அவரவர்களுடைய நகரத்திற்குச்சென்றபின், மயாஸுரனால் விசித்ரரத்னங்களால் நிர்மாணம் செய்யப்பட்டதாயுள்ள சூரியனைப்போல் பிரகாசிக்கும் அந்த சபையின் பிரதேசத்தில் உத்தமமான சிம்ஹாஸனத்தில் ஸ்ரீகிருஷ்ணருடன் சேர்ந்து தர்மபுத்திரர் உட்கார்ந்தார். அப்படியே ருக்மணி தேவி முதலான ஸ்ரீகிருஷ்ணருடைய பத்னிமார்களும் பீமார்ஜுனர்களும் ஸ்ரீகிருஷ்ணருடைய சமீபத்தில் உட்கார்ந்தனர். அப்படியே பீமசேனருடன் சேர்ந்த துரௌபதிதேவி, மங்கள தேவதையான ருக்மணி ஸத்யபாமை இவர்களின் சமீபத்தில் உட்கார்ந்தாள். நகுலன் ஸகதேவன் திருஷ்டத்யும்னன் முதலியோர் அர்ஜுனனுடைய சமீபத்தில் உட்கார்ந்தனர். அப்படியே பலராமன் ஸாத்யகி இவர்கள் தர்மபுத்திரனுடைய சமீபத்தில் உட்கார்ந்தனர். அப்பொழுது அந்த சபை விஷ்ணுவுடன் கூடிய ப்ரம்ம ஸபைபோல் விசேஷமாய் பிரகாசித்தது. அந்த மய சபையில் விசித்திரமான ஸுவர்ணமாலிகைகளுடன் கூடியவர்களாய் வெண்மையான வஸ்திரங்கள் உடுத்தவர்களாய், ஜ்வலிக்கும் கிரீட குண்டலதாரிகளாய், பிரசித்தர்களாயுள்ள அந்த ராஜர்கள் அதிகமாய் பிரகாசித்தனர். பத்னிமார்களுடன் கூடிய ஜகத் ஸ்வாமியான ஸ்ரீகிருஷ்ணர் தேவ சபையில் அநந்தக்குணக்கடலரான மகாவிஷ்ணுவைப்போல் இந்த சபையில் விசேஷமாய் சோபித்தார். எல்லா அரசர்களும் நண்பர்களின் கூட்டங்களும் ஸ்ரீகிருஷ்ணரை உபாசித்தனர். அந்தசமயம் துரியோதனன் தம்பிமார்களுடன்கூடி கத்தி தரித்தவனாய் அந்தசபைக்கு வந்துசேர்ந்தான். அவன் இந்திர நீலமாணிக்யத்தின் காந்தியால் மறைந்த சபையின் வாசல் வழியை அறியாமல், அந்த வாசற்படியைவிட்டு, உள்ளே இருந்துவரும் பதார்த்



தங்களைக்காண தடங்கலாய் இல்லாததான ஸ்படிகக்கல்ச்சுவற்றில் பலமாய் ரக்தம்பெருகும்படி முட்டிக்கொண்டான். அப்பொழுது தர்மபுத்திரரால் ஆக்ஞாபிக்கப்பட்ட நகுல ஸகதேவர்கள் துரியோதனனின் இருகைகளைப்பிடித்து அந்த சபையின் வாசற்படிக்குள் பிரவேசம் செய்வித்தனர். துரியோதனன் சபையில் ஓர் க்ஷணகாலம் உட்கார்ந்திருந்து பாண்டவர்களின் திவ்ய சம்பத்தைக்கண்டு சகியாமல் அந்த சபையின் மற்றொரு புறத்திற்கு எழுந்து சென்றான். அங்கு இந்திரநீல மாணிக்யங்களால் நிர்மாணம் செய்யப்பட்டதான தளத்தில் ரத்னமயமான கமல புஷ்பங்களை பார்த்துவிட்டு, துரியோதனன் அங்கு ஜலமிருப்பதாய் எண்ணி தன் வஸ்திரம் நனைந்துபோகுமோ, என்று பயந்து, தன் வஸ்திரங்களை துடைவரையில் உயரத்தூக்கிக்கொண்டான். ரத்னங்களின் உத்கிருஷ்டமான காந்தியால் மறைந்திருந்த ஜலப்பிரதேசத்தை சாமானிய தரை என்று எண்ணி தம்பிமார்களுடன் சேர்ந்து அந்த ஜலப்ரவாகத்தில் விழுந்தான். அதைப்பார்த்து பூமியின் பாரம் நாசமாவதற்காக ஸ்ரீ கிருஷ்ணரால் நன்றாய் சூசனை செய்யப்பட்டவரான பீமசேனர், துரௌபதியுடனும் அவரைச்சேர்ந்தவர்களான திருஷ்டத்யும்னாதிகளுடனும்சேர்ந்து, கெட்டியாக உரத்த ஸ்வரத்துடன் சிரித்து துரியோதனனை பரிகாசம் செய்தார். பீமசேனரை அனுஸரித்து ஸ்ரீ கிருஷ்ணரின் ஸ்திரீ ஜனங்களும் சிரித்தனர். மந்தஹாஸத்தால் பிரகாசிக்கும் திருமுக சந்திர மண்டலங்கொண்ட ஸ்ரீ கிருஷ்ணர் பீமசேனரின் முகத்தைப்பார்த்துவிட்டு ஒருவார்த்தையும் பேசவில்லை. பிறகு யுதிஷ்டிரர் சிரிப்பைத் தடுத்து, வஸ்திரங்களையும் புஷ்பங்களையும், சந்தனங்களையும் துரியோதனனுக்கு அனுப்பினார். துரியோதனன் மிகவும் வெட்கமடைந்து யுதிஷ்டிரர் தந்த உத்தமவஸ்திராதிகளையும் நிராகரித்து, துரௌபதியிடமும் பீமசேனரிடமும்விசேஷமான கோபம் கொண்டு, சகுனியுடன்கூடி ஹஸ்தினாபுரம் வரும்பொழுது,வழியில் தன் மாமனான சகுனியைப்பார்த்து பேசினான். எந்த துரௌபதி பீமசேனர்கள் ஸ்ரீகிருஷ்ணரின் எதிரில் என்னை பரிகாசம் செய்தனரோ, அப்பேர்ப்பட்டவர்களுக்கு ஸங்கடத்தை

உண்டுபண்ணாமல் நான் இனி உயிர்தரிக்க முடியாது. என்னை பரிகாசம் செய்தபொழுது எனக்கு சக்தியிருந்தால் பீமசேனனை அப்பொழுதே கொல்வேன். ஸ்ரீ கிருஷ்ணரின் அக்ர பூஜையை நாசம் செய்வேன். இதில் சந்தேகமில்லை. சக்தி இல்லாததால் இவைகளை நான் செய்யவில்லை. இம்மாதிரி இருக்கும் பாண்டவர்களின் ப்ரபாவத்தைப் பார்த்துவிட்டு எந்த புருஷன்தான் பிழைத்திருக்க எண்ணுவான். பாண்டவர்களுக்கு எல்லா ராஜர்களுமே வைசியர்களைப்போல் கப்பத்தைக் கட்டினர். என்றிவ்வாறு துரியோதனனால் சொல்லப்பட்ட சகுனி, பாண்டவர்களிடம் துவேஷத்தை திடப்படுத்துவதற்காக இவ்வாறு பேசினான். ராஜசிரேஷ்டனான ஹே துரியோதனா! பலிஷ்டர்களாய் ப்ராதாக்களாயுள்ள பாண்டவர்களுடன் மறுபடியும் துவேஷம் ஏன்? வீரர்களாய் குணங்களால் ஜ்யேஷ்டர்களாய் பலத்தால் மேலானவர்களாயுள்ள பாண்டவர்களை அனுஸரித்துப்பிழை என்று சகுனி சொல்லவும், விருத்தியடைந்த கோபமுள்ள துரியோதனன் இவ்வாறு பேசினான். பாண்டவர்களின் அந்த ஐசுவரியம் ஸம்பூர்ணமாய் என்னிடம் வராமல் போனால் ஒருக்காலும் நான் பிழைக்கமாட்டேன், என்று நான்ஸத்யமாய் உன்னிடம் சொல்லுகிறேன். பாண்டவர்களின் அந்த ஐசுவரியத்தை என் புஜபலத்தால் நான் அபகரிக்க எப்பொழுதும் சக்தனாகமாட்டேன். இந்திரன்கூட அவர்களை ஜயிக்க சக்தனாகமாட்டான். அப்படியிருக்க மனுஷ்யர்கள் அவர்களை யுத்தத்தில் ஜயிக்க சக்தர்களாவது எப்படி? என்று துரியோதனன் சொல்ல, மஹா பாபிஷ்டனான சகுனி பாபிஷ்டர்கள் எல்லோருக்கும் சிரேஷ்டனான துரியோதனனைப் பார்த்து இவ்வாறு பேசினான். ஹே துரியோதனா! பாண்டவர்களிடம் சக்ரவர்த்தி ராஜர்களின் பிரகாசிக்கும் எந்தெந்த சம்பத்துக்களை நீ கண்டாயோ அந்த ஸம்பத்தை எல்லாம் நான் உன் சமீபத்தில் சொக்கட்டான் ஆடி, சிரமமின்றி கிரகித்து விடுகிறேன் என்று சகுனி சொல்லவும் துரியோதனனுடைய சித்தம் தெளிந்து பிரஸன்னமானான். சகுனியும் துரியோதனனும் திருதராஷ்டிர ராஜனிடம் வந்தனர். பிறகு த்வாபரனென்ற அஸுரனின் அம்சனாய் விசேஷ பாபங்களைச் செய்பவனாய் நாஸ்திக்யத்



திற்கு அபிமானியாயுள்ள சகுனி திருதராஷ்டிரராஜனிடம் வந்து, அவருடைய மகனான துரியோதனன் முன்போல் சரீர காந்தி இல்லாமல், தேகம் வெளுத்துப்போய் மெலிந்திருக்கிறானென்று சொன்னான். இதைக்கேட்டு திருதராஷ்டிரன் மனது துக்கமடைந்து, துரியோதனன் எதற்காக இவ்வாறு வெளுத்திருக்கிறான் என்று கேட்டான். அப்பொழுது சகுனியும் துரியோதனனும் சேர்ந்து, அவர்கள் ஹஸ்தினாகரத்து பாதையில் யோசனை செய்திருந்த சொக்கட்டான் ஆட்டத்தை ஆரம்பிக்கும் ஸமாசாரத்தை திருதராஷ்டிர ராஜனிடம் சீக்கிரம் அறிவித்தனர். திருதராஷ்டிரன் இந்த வாக்யத்தைக்கேட்டு இந்த சொக்கட்டான் ஆட்டம் தர்மத்திற்கு விரோதமானது, அவர்களின் நாசத்திற்கு காரணம், உங்கள் துராலோசனை எனக்கு இஷ்டமானதாய் இல்லை, பாண்டவர்கள் தன் புஜபல பராக்ரமத்தால் மகா ஸம்பத்தைப் பெற்றிருக்கின்றனர் என்று சொன்னார். நீ திக்விஜயம் செய்து யாக சிரேஷ்டங்களைச் செய். விசேஷமான குணங்களுள்ளவராய் மேலான பராக்கிரமம் படைத்தவர்களாயுள்ள உன் அண்ணன் தம்பிமார்களான பாண்டவர்களிடம் அதிகமாய் பொறாமைப் படாதே என்று திருதராஷ்டிரன் சொல்லவும், துரியோதனன் உடனே தந்தையைப் பார்த்து இவ்வாறு பேசினான். சொக்கட்டானாடி பாண்டவர்களின் ஐசுவரியத்தை அபகரிக்க, நீ இச்சிக்காமல் போனால், இப்பொழுதே நான் இறந்தேனென்றேஅறி. பாண்டவர்களுடன் நீ ஸுகமாய் இரு. நான் உயிருடன் இருக்க உனக்கு விருப்பமிருந்தால், திரௌபதியுடன் கூடிய பாண்டவர்களை சொக்கட்டான் ஆட சீக்கிரம் இங்கு வரவழை. சொக்கட்டான் ஆட்டத்தை நடத்துவதில் எந்த அதர்மமும் இல்லை. ப்ராம்மணர்கள் வேதங்களைக்கொண்டு ஜீவிப்பார்கள். க்ஷத்திரியர்கள் சஸ்திரங்களைக்கொண்டு ஜீவிப்பார்கள். சத்ரு எதால் சேதிக்கப்பட்டவனாய் ஆகிறானோ, அதுவே சஸ்திரமாகும். சேதிப்பதாய் எது இல்லாததோ அது சஸ்திரமாகாது. ஆகையால் சொக்கட்டான் ஆடுவது தர்மமே ஆகும். அதை நடத்துவதால் உனக்கும் மகா பலனும் வருகிறது. என்று துரியோதனன் சொல்லவும், திருதராஷ்டிரன் எனக்கு இந்த சொக்கட்டான்

ஆட்டத்தின் பலன் வேண்டாம். அது உனக்கே இருக்கட்டும் என்று பதில் சொன்னார். இப்படிச் சொல்லியும்கூட திருதராஷ்டிரன் கலிப்பிரவேசமடைந்து பிள்ளையிடமுள்ள சிநேகத்தால் விதுரனை பாண்டவர்களை அழைத்துவரும்படி ஆக்ஞைபிட்டான். கலி திருதராஷ்டிரனிடம் தான் மகனாய் பிறக்க ஓர் அம்சத்துடன் எப்பொழுது பிரவேசித்தானோ, அன்று முதல் திருதராஷ்டிரன் ஹஸ்தினாவதியை விட்டு வனத்திற்கு தவத்திற்காக சென்ற வரையில், அவனை விட்டுப் பிரியவில்லை. ஆகவே இந்த மத்திய காலத்தில் திருதராஷ்டிரனின் மனம் பாபம் கொண்டிருந்தது. மகாஞானியான விதுரன், திருதராஷ்டிரனே! நீ செய்யும் எத்தனம் பாபத்திற்கு ஸாதனமானது. குலத்திற்கே இது நாசத்தை விளைவிப்பது என்று உனக்கு அபகீர்த்தி ஏற்படும். இதில் சிறிதும் யோசனை வேண்டாம் ஆகையால் இந்த சொக்கட்டான் எத்தனத்தை செய்யாதே. என்று சொல்லி திருதராஷ்டிரனைத் தடுத்தான். இப்படி விதுரன் சொல்லியும் திருதராஷ்டிரன் சொக்கட்டானாட்டத்தில் கலகம் ஏற்படாமல், நாம் தடுக்கிறோம், என் பிள்ளைகளான பான்டவர்களும் துரியோதனாதிகளும் ஒரே இடத்தில் இருந்து விளையாடுவதைப்பார்க்க நான் விரும்புகிறேன். ஆகையால் பாண்டவர்களை சீக்கிரம் அழைத்துவா என்று சொன்னார். இவ்வாறு பலாத்காரமாய் சொல்லப்பட்ட விதுரன், ஸ்ரீ கிருஷ்ணர் துவாரகைக்கு புறப்பட்டுப்போன சமயத்தில் பாண்டவர்களிடம் போனான்.

## பாண்டவர்களின் சொக்கட்டான் ஆட்டம்.

துரியோதனன் ஸபையில் அவமானமடைந்து பாண்டவர்களின் ஸமீபத்திலிருந்து ஹஸ்தினாபுரத்திற்கு புறப்பட்டுப் போன பிறகு நாரதர் தர்மபுத்திரரிடம் வந்து சேர, ஏதாவது சமாசாரம் சொல்லும்படி யுதிஷ்டிரர் ப்ரச்னம் செய்ததின் பேரில், நாரதர், தன் தேசத்திற்கு திரும்பி வந்த சத்ருவான ஸால்வராஜனைப்பற்றி சொன்னார். இப்பொழுது அரசர்களில் யார் ஜயிப்பதற்காக எத்தனம் செய்கிறார் என்று யுதிஷ்டிரர் ப்ரச்னம் செய்ய, நாரதர் இவ்வாறு சொன்னார். ஸௌபவிமானத்திற்கு அதிபதியான ஸால்வ ராஜன் யாதவர்களை ஜயிக்க முன்பு ஒரு ஸமயம் பரமசிவனிடமிருந்து வரனை ஸம்பாதித்தான். (தொடரும்)



# ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய
# ஸ்ரீமத்வ விஜயம்.

---

நான்காவது ஸர்க்கம்.

---

(முன் 176-ம் பக்கம் தொடர்ச்சி.)

---

(30) இவ்வாறு வாஸுதேவர் தன் தாயிடமிருந்து அனுமதி பெற்று பாஜக க்ஷேத்திரத்திலிருந்து புறப்பட்டு, அவர் ஜகத்குருவாயினும், தன் குருவான அச்யுதப்ரேக்ஷதீர்த்தரின் ஸமீபம் வந்து தன் தாயின் அனுமதிபெற்ற விதத்தை எல்லாம் அறிவித்து, அவரை தன் ஸேவாதிகளால் சந்தோஷப்படுத்தி, சுயம் அவர் தேவோத்தமர்களால் தங்களிடம் அனுக்ரஹம் புரியும்படி செய்துகொள்ளப்பட்டவராயினும், அந்த அச்யுதப்ரேக்ஷரை தன்னிடம் அனுக்ரஹம் செய்யும்படி செய்துகொண்டு, எப்பொழுதுமே சேர்ந்தாற்போல் எல்லா ஆசிரமங்களையும் வகிக்கும் தேவோத்தமரான வாயுபகவானாகிய அவர் விசேஷமாய் மனுஷ்ய திருஷ்டிக்கு புலப்படும்படியாய் ஸன்யாஸாசிரமத்தை அந்த அச்யுதப்ரேக்ஷாசாரியாரிடமிருந்து பெற்றார். (31) அந்தந்த காலத்துக்கேற்ற விசேஷமான கர்மாவைச் செய்ய அறிந்தவரான வாஸுதேவர் ஸன்யாஸம் பெற விதிக்கப்பட்டிருக்கும் முறைகளைச் சொல்லும் சாஸ்திரத்தின்படி செய்ய வேண்டியதாயுள்ள, ஜீவச்ச்ராத்தம் முதலான அநேக கர்மங்களை ஸம்பூர்ணமாய் செவ்வனே செய்துமுடித்து தனக்கு எப்பொழுதுமே ப்ரஸன்னராயுள்ள ஸ்ரீ ஹரியின் விசேஷமான ப்ரஸாதத்தை அடையவேண்டி, மீண்டும் தன் தேகம் இந்திரியங்கள் ஆத்மா மற்றும் ஸமஸ்தங்களையுமே பகவானிடமே ஸமர்ப்பிப்பதாய் அறிவிப்பதாயுள்ள மயாஸர்வம் ஸங்யஸ்தம் என்ற சொல்லைச் சொன்னார், என்றால், ஓம் என்ற ப்ரணவத்தை உச்சரித்தார். (32) ஓம் என்ற ப்ரணவத்தின் ஸமுதாயமென்பது, அகாரம், உகாரம் மகாரமாகிய மூன்று மாத்திரைகள் முதற்கொண்டு நான்கு மாத்திரைகள், ஐந்து மாத்திரைகள், இவ்வாறு அநந்த மாத்திரைகள் இவைகளைக்கொண்டதென்று

ஞானிகள் கூறுகின்றனர். அப்பேர்ப்பட்டதான பிரணவத்தை மூன்று மாத்திரை முதல் அநந்தமாத்திரைகள் வரையிலும் ஜபிக்க, இனி வரப்போகும் ப்ரம்மாவாகிய, இந்த வாஸுதேவராகிய ஸன்யாசிதான் முக்யமான அதிகாரி என்று அச்சமயம் அவர் ப்ரணவத்தை உச்சரிக்கும்பொழுது சூசிக்கப்பட்டதாயிற்று (33) அவருடைய குணங்களுக்குத் தகுந்தபடி பொருட் பெருமைவாய்ந்த பூர்ணப்ரக்ஞர் என்ற நாமாவை இவ்வாஸுதேவருக்கு பலித்தாதத்வபுஷே முதலான சூக்தத்தில் த்ருதிய மஸ்ய விருஷபஸ்ய முதலான மந்திரங்கள் மட்டில் கொடுக்கவில்லை. வேத மந்திரங்களை உபதேசிப்பவராய் ஆயிரக்கணக்கான பிராம்மணர்களால் வணங்கப்பட்டவராய் பெரும் கீர்த்தி வாய்ந்தவரான அந்த அச்யுதப்ரேக்ஷாசாரியாளும் இவரை பூர்ணப்ரக்ஞதீர்த்தரென்றே பெயரிட்டு அழைத்தார். (34) சந்தனப்பூச்சு முதலியவைகளில்லாதவராய், தாம்பூலமில்லாதவராய், கடுக்கன் மோதிரம் முதலிய ஆபரணங்களில்லாதவராய், இருக்கும் இந்த பூர்ணப்ரக்ஞர் கேவலம் ஓர் தண்ட காஷ்டத்தை மட்டில் பிடித்துத் த்ரிலோகத்திற்கும் அலங்காரமாய் இருப்பதைப்பார்த்துவிட்டு ஜனங்கள் இயற்கை அழகுதான் இணையற்றது என்று நிச்சயித்தனர் (35) தாங்கள் நமஸ்காரம் செய்ய ஸமயம் எப்பொழுது வாய்க்குமென்று எதிர் பார்த்திருந்த ஆதிசேஷன், பரமசிவன், கருடன் முதலான தேவ சிரேஷ்டர்கள் பூர்ணப்ரக்ஞரை வணங்க அவர் தன் குருவான அச்யுதப்ரேக்ஷரையும் அவருடைய குருவையும் இம்மாதிரி அவருடைய குரு பரம்பரையான ஸன்யாசிகளை நமஸ்காரம் செய்தார். பெரியோர்கள் செய்யும் பாசாங்கு மிக்க பெரிது. இது ஓர் ஆச்சரியமே. (36) உத்தம சிஷ்யரை அடைந்ததால் திடமடைந்த மனது கொண்ட யதீசுவரரான அந்த அச்யுதப்ரேக்ஷர் நூதனமாய் ஸன்யாஸியான பூர்ணப்ரக்ஞருக்கு ஸன்யாஸாசிரமத்தின் ஆசாரங்களை அதிகமாய்ச் சொல்லிக்கொடுக்கப் பிரியப்பட்டு அவருடைய ஆசாரணையை கவனித்து பார்க்கவும், தான் அறிந்துகொண்டதைவிட அதிகமான அனுஷ்டான முறையை பூர்ணப்ரக்ஞாசாரியாரிடமிருந்தே தெரிந்துகொண்டு மனதிற்குள்ளேயே மிக்க ஆச்சரியமடைந்தார்.



## கங்கை உடுபிக்கு வந்தது.

(37) ஒரு ஸமயம் பூர்ணப்ரக்ஞர் ரூப்யபீடபுரமாகிய உடுபி க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் சேஷசாயியாய் தமக்கு குலதெய்வமாயுள்ள அநந்தபத்மநாபரை நமஸ்காரம் செய்திருக்கையில் பகவான் ஒருவரின் மீது ஆவேசம்வந்து தன் கையால் உடனே அவருடைய கையைப்பிடித்தார். (38) அவரை அங்கிருந்த அச்யுதப்ரேக்ஷரிடம் அழைத்துவந்து, மோக்ஷ ஸாதகமான தத்வத்தை அறிய விருப்பங்கொண்டு வெகுகாலம் நீர் என்னை என்ன சேவை செய்து வந்தீரோ அதற்கு பலனாய் இதோ இந்த பூர்ணப்ரக்ஞாசாரியாளை உமக்குத் தந்தருளுகிறேன். என்று சொல்லி பூர்ணப்ரக்ஞரை அச்யுதப்ரேக்ஷரிடம் ஒப்புவித்தார். (39) அச்யுதப்ரேக்ஷர் இவ்வாறு பகவான் அநந்தேசுவரர் செய்த அனுக்ரகத்தை சந்தோஷமாய் அன்புடன் ஏற்றுக்கொண்டு, தன் மனோரதம் பூர்த்தியானதாய் எண்ணி அவர் சுயம் உலகப்பற்று இல்லாதவராயினும் பூர்ணப்ரக்ஞாசாரியாரிடம் அதிகமான பற்றுதலை அடைந்தார். ஸாதுக்களிடம் பற்றுதல் கொள்வது உலகப்பற்றில்லாதவர்களுக்கும் பூஷணமே ஆகும். (40) சிறிது நாளைக்கு பிறகு பூர்ணப்ரஞர் கங்கா யாத்திரைக்குச் செல்ல விருப்பங்கொண்டு அதற்கு தனக்கு அனுமதியளிக்கக் கோரி அச்யுதப்ரேக்ஷாசாரியாரை அடிக்கடி நமஸ்கரித்து பிரார்த்திக்கவும், அச்யுதப்ரேக்ஷாசாரியார் தன் பிரிய சிஷ்யரான பூர்ணப்ரச்ஞாசாரியாரை இனி விட்டுப்பிரியவேண்டியதாய் இருக்குமே என்று அந்த விரகமாகிய அக்னியின் வெக்காட்டினால் சங்கடப்பட்ட மனதுள்ளவராய் உடுபியிலுள்ள தன் நாதனை அநந்தேசுவரரை எண்ணினார். (41) இவ்வாறு அவர் ஸ்மரித்த மாத்திரத்தில் கருணைக்கு இருப்பிடமான அந்த ஸ்ரீ அநந்தேசுவரர் ஒரு ஆசாமியின்மீது ஆவேசம் வந்து, பூர்ணப்ரக்ஞாசாரியாளைப்பார்த்து, ஸ்வர்கலோகத்து நதியாகிய கங்கை நீ ஸ்நானம் செய்வதற்காக உனக்காகவென்றே என் குளத்தில்; (மத்வஸரோவரம்) இன்றைக்கு மூன்றுவது நாள் வரப்போகிறாள். ஆகவே நீங்கள் யாத்திரைக்காகவென்று உன் குருவை விட்டு

தூரதேசம் செல்லாதே, என்று சொன்னார். (42) ஸ்ரீ அநந்தேசவரரின் ஆக்ஞையின்பேரில் அவ்வாறு அந்த தடாகத்தில் கங்கை வந்து சேரவும், ஜனங்கள் அதை ப்ரத்யக்ஷமாய் கண்டுகொண்டு பூர்ண ப்ரக்ஞாசாரியாருடன் எல்லோரும் அதில் அன்று ஸ்நானம் செய்தனர். பகவான் பூர்ணப்ரக்ஞாசாரியாருக்குச் செய்த அனுக்ரஹத்தின் அறிகுறியாக அதன் பிறகும் கங்கை பன்னிரண்டு வருஷத்திற்கொருமுறை அவ்வாறே அந்த குளத்தில் அதே நாளில் எப்பொழும் வந்துகொண்டிருப்பாள்.

## பூர்ணப்ரக்ஞரின் படிப்பு.

(43) ஸன்யாஸம் பெற்று நாற்பது நாளான பின், பல வகையான தர்க்கங்களால் ப்ரதிவாதிகளை ஜயிப்பதில் தயையில்லாதவர்களாய் ஜயசீலர்களாயுள்ள வாஸுதேவ பண்டிதர் முதலானவர்களை வாதத்தில் ஜயபத்திரிகைப் பெறுதலுடன் ஜயித்தார். (44) தன் சிஷ்யரை மிக்க பண்டிதராய்ச் செய்ய விருப்பங்கொண்ட குருவான அச்புதப்ரேக்ஷரின் ப்ரேரணையின்பேரில் மிக்க முறண்பட்டதான யுக்திகளைக்கொண்ட இஷ்டஸித்தி என்ற அத்வைதிகளின் கிரந்தத்தை, அதில் ஆகாங்க்ஷையில்லாதவராயினும், குருவாக்யத்தில் கௌரவம் வைத்து, அநேக விஷயங்களை அறிந்த பூர்ணப்ரக்ஞர், அச்யுதப்ரேக்ஷாசாரியாரிடமிருந்து, சிரவணம் செய்தார். (45) அந்த இஷ்டஸித்தி என்னும் நூலின் முதல் சுலோகத்திலேயுள்ள முப்பத்திரண்டு வகையாயுள்ள தோஷ ஸமூகங்களை பூர்ணப்ரக்ஞாசாரியார் எடுத்துக்காட்டவும், பாடம் சொல்லி வந்த குருவான அச்யுதப்ரேக்ஷர் இதற்கடுத்த மேல்வாக்யங்களில் நீங்கள் சொல்லும் இந்த தோஷங்களெல்லாம் ஸமாதானம் சொல்லப்பட்டு, அவைகள் நிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றனவென்று பதில் சொல்ல, பூர்ணப்ரக்ஞர் அவைகளை இப்பொழுதே எடுத்துச்சொல்லுங்களேன் என்று சொன்னார். (46) மாயாவாதமாகிய அத்வைத சாஸ்திரத்தில் நிபுணராயினும் அச்யுதப்ரேக்ஷர் பூர்ண ப்ரக்ஞரைப்பார்த்து உனக்கு பாடம் சொல்ல எனக்கு ஸாமர்த்தியமில்லை என்று கோபத்துடன் சொல்லிவிடவும், இந்த குருசிஷ்ய வாக்குவாதத்தைக் கேட்டிருந்த ஜனங்களுக்கு இந்த சாஸ்திரம் தோஷங்கொண்டதென்ற சந்தேகம் முளைக்க ஆரம்பமாயிற்று.

(தொடரும்.)



# ஆசாரமாலை.

(முன் 192-ம் பக்கம் தொடர்ச்சி.)

பிரம்மா முதல் திருணம் வரையில் எல்லா ஜகத்தும் திருப்தியடையட்டும் என்று பூமியில் திலோதகம் விடவேண்டியது ஸம்க்ஷேப தர்பணமென்று சொல்லப்படுகிறது. இந்த ஸம்க்ஷேப தர்பணமானபின் வஸ்திரநிஷ்பீடனமென்ற கர்மா செய்யப்படவேண்டியதாகும். அதாவது உடுத்த வஸ்திரத்தைப் பிழியவேண்டும். ஏகாதசி, துவாதசி, சதுர்தசி இந்த தினங்களிலும் ஸங்க்ரமண தினத்திலும் சிராத்த தினத்திலும் வஸ்திரத்தைப்பிழியலாகாது. தேவரிஷிபித்ரு தர்ப்பணம் செய்யும் வரையில் வஸ்திரத்தை பிழியலாகாதென்றும், வஸ்திரத்தைப் பிழியாமலிருந்தால் ஸ்நானம் செய்ததாய் ஆகுமென்றும் மகா யாக்ஞவல்க்ய ஸ்மிருதி அறிவிக்கிறது. வஸ்திரத்தைப் பிழிந்த ஜலம் சிராத்தோச்சிஷ்டத்திற்கு பாகஸ்தர்களாயுள்ளவர்களுக்கு போய் சேருவதால் அவசியம் இந்த கர்மாவைச் செய்யவேண்டுமென்கிறது தர்மசாஸ்திரம். தந்தை உயிருடனிருந்தால் அந்த புருஷன் கவ்யவாஹர், அநலன், யமன், ஸோமன், அர்யமா, அக்னிஷ்வாத்தாக்கள், பர்ஹிஷதர்கள், ஸோமபர்கள் ஆஜ்யபர்கள் இவர்களுக்கு ஜலாஞ்ஜலியை விடவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. வஸ்திரத்திற்கு பதிலாக தான் தரித்துக்கொண்டிருந்த யக்ஞோபவீதத்தைப் பிழியலாம். அதாவது பிரம்மசாரியாய் இருந்தால் ஒத்தைப்பூணலைத் தரிக்கவேண்டும். விவாககாலத்தில் இரண்டு பூணல்களை தரிக்கவேண்டும். உத்தரீயத்திற்காக மூன்றாவது பூணலை தரிக்கவேண்டும். வஸ்திரத்திற்காக நான்காவது பூணலை தரிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் வஸ்திரத்தையாவது யக்ஞோபவீதத்தையாவது தேவரிஷிபித்ரு தர்பணத்திற்கு பின் பிழியவேண்டும்.

வஸ்திரம் பிழிந்துகொண்டபின் வஸ்திரத்தை உலரப்போடவேண்டும். வஸ்திரத்தை உலரப்போடும்பொழுது வஸ்திரத்தின் நுனி கிழக்கேயாவது வடக்கேயாவது இருக்கும்படி உலரப்போடவேண்டும். தெற்கு திக்கிலாவது மேற்கு திக்கிலாவது நுனி இருக்கும்படி உலரப்போட்டுவிட்டால் அது உலர்ந்தால் பரிசுத்தமானதாய் ஆகாது, உடனே அதை மீண்டும் ஜலத்தில் தோய்த்துவிடவேண்டும்.

ஜபம் செய்ய ஆஸனம் மூங்கில் பாயில் உட்கார்ந்து ஜபித்தால் தாரித்ரியமும், கல் ஆஸனத்தில் அமர்ந்து ஜபித்தால் வியாதியும் எற்

படும். பூமியிலிருந்து ஜபித்தால் துக்கம் ஏற்படும். மரப் பலகையின் மீது ஜபித்தால் தௌர்பாக்யம் உண்டாகும். புல்லின் ஆஸனம் கீர்த்தியின் அபிவிருத்தியையும், தளிரின் ஆஸனம் சித்தப்ரமத்தையும் தரும். கிருஷ்ணாஜினத்தின் மீதிருந்து ஜபித்தால் ஞானவிருத்தியும், புலித்தோலின்மீதிருந்து ஜபித்தால், மோக்ஷஸாதகமும் ஏற்படும். வெண்மையான வஸ்திரத்தின்மீதிருந்து ஜபித்தால் யசஸ்ஸின் விருத்தியும் சித்ரகம்பளத்தின்மீது ஜபித்தால் எல்லாவற்றின் விருத்தியும் உண்டாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. புத்ரனை உடையவன் யோகபட்டிகை வ்யாக்ராஜினம் கிருஷ்ணாஜினம் இவைகளின்மீதிருந்து ஜபிக்கலாகாது. வெறும் தரையின்மீதும் பலகையின்மீதும் புல்லாஸனத்தின்மீதும் இருந்து ஜபதபாதிகளைச்செய்வதை விலக்கவேண்டும் என்பது ஒருவரின் அபிப்பிராயம். ஜபகாலத்திலும் த்யானகாலத்திலும் ஆஸனம் சைலாஜின குசோத்தரமாயிருக்கவேண்டுமென்று ப்ராம்ம புராணம் அறிவிக்கிறது. அதாவது தரையின்மீது தர்பங்களை பரப்பி அவைகளின்மீது புலித்தோல் முதலியவைகளைப் போட்டுக்கொண்டு அதன்மீது வெண்மையான வஸ்திரம் கம்பளம் முதலியவைகளைப்போட்டுக்கொண்டு அதன்மீது ஜபாதிகளைச் செய்யவேண்டியது முறையாகும்: இது வெளி ஆஸனமாகும்: சரீரத்திலேயே ஆஸனங்களை தரிக்கவேண்டியதுண்டு. பாஞ்சராத்திராகமத்தில் பத்மாஸனம் ஸ்வஸ்திகாஸனம், வீராஸனம் என்று மூன்று வகை ஆஸனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. தொப்புளுக்குமேல் வரும்படி இருகால்களை மடித்துக்கொண்டு உட்காருவது பத்மாஸனமென்று பெயர். இது யோகிகளுக்கு மிகவும் ப்ரியமானது. துடையின்கீழே இருகால்களும் சேர்ந்திருக்கும்படி மடக்கிக்கொண்டு சரீரம் நிமிர்ந்து உட்காருவது ஸ்வஸ்திகாஸனமென்று பெயர். ஒரு காலை பூமியில்வைத்து மற்றொருகாலை துடையின்மீது வைத்துக்கொண்டு சரீரம் நிமிர்ந்து உட்கார்ந்தால் வீராஸனமெனப்படும். இடது பக்கத்தில் பிருஷ்ட பாகத்தின் சமீபத்தில் வலது கணக்காலையும், அப்படியே வலது பக்கத்தில் பிருஷ்ட பாகத்தின் சமீபத்தில் இடது கணக்காலையும், வைத்துக்கொண்டு உட்காருதல் கோமுகாஸனம் என்று சொல்லப்படும்.

**ஜபம் செய்ய இடம்.** ஸந்தியாவந்தனம் எங்கு ஆரம்பிக்கப்பட்டு செய்யப்பட்டதோ அதே இடத்தில் தான் இருந்து, ஜபம் செய்து, ஸந்தியாவந்தனத்தின் பாக்கியை செய்து முடிக்க வேண்டும். ஜபம் மட்டில் வேறிடத்திலிருந்து செய்தால் அதற்கு ப்ராயச்சித்தமாக மீண்டும் ஸந்தியாவந்தனம் செய்யவேண்டும். ஸந்தியாவந்தனம்



செய்யும் ஸ்தானத்தின் சுற்றிலும் நான்கு பாகம் அளவு நாராயண க்ஷேத்திரமாகும். அதில் செய்யும் ஜபாதிகள் அனந்தபலனைத்தரும். வீட்டில் செய்யும் ஜபம் ஒரு மடங்காய் அந்த ஜபத்தின் சங்கியைக்குத் தகுந்தபடி பலனைத்தரும். மாட்டுக்கொட்டிலில் செய்தால் ஒன்றுக்கு நூறு மடங்காய் பெருகி அவ்வளவு அதிகமான பலனைத்தரும். புண்ணிய தீர்த்தங்களின் கரையிலும், புண்ணிய அரண்யத்திலும், புண்ணிய தோட்டங்களிலும் செய்தால் ஆயிரம் மடங்கு விருத்தியாகும். மலையின் மீதுள்ள வனத்தில் செய்தால் பதினாயிரம் மடங்கு விருத்தியாகும். புண்ணிய நதிக்கரையில் செய்தால் ஒரு லக்ஷம் மடங்கு விருத்தியாகும். ருத்திராதிகளின் தேவாலயத்தில் செய்தால் கோடி மடங்கு விருத்தியாகும். ஸ்ரீ விஷ்ணுவின் சன்னதியில் செய்தால் அனந்த மடங்காய் விருத்தியாகி அந்த ஜபத்தின் பலனைத்தரும். அசுவத்தவிருக்ஷத்தின் அடி பாகத்திலிருந்து ஜபம் ஹோமம் தேவதார்ச்சனை முதலியவைகளைச்செய்தால் எப்பொழுதும் குறைவு அடையாததாய் அக்ஷயமான பலன் வருமென்று சதுர்முகன் உரைத்திருக்கிறார். ஸ்ரீவிஷ்ணுவின் கீழ் பக்கத்திலிருந்து ஜபித்தால் ஆயுஸ்விருத்தி. அக்னி மூலையிலிருந்து ஜபித்தால் கலகமுண்டாகும். தக்ஷிணத்திலிருந்து ஜபித்தால் ஞானமுண்டாகும். நிர்ருதி மூலையிலிருந்து ஜபித்தால் மரணமேற்படும். பஸ்சிமத்திலிருந்து ஜபித்தால் மோக்ஷத்திற்கு ஸாதனமாகும். வாயு மூலையிலிருந்து ஜபித்தால் ஆகர்ஷணம் செய்யலாம். உத்தரத்திலிருந்து ஜபித்தால் ஐசுவரியமுண்டாகும். ஈசான்யமூலையிலிருந்து ஜபித்தால் உச்சாடனமுண்டாகும். ஸ்ரீவிஷ்ணுவின் ஸன்னிதானத்திலிருந்து ஜபித்தால் ஸமஸ்தமும் சித்தியாகும் என்று ஒரு ஸ்மிருதி அறிவிக்கிறது.

**ஜபத்தின் தோஷங்கள்** பத்துவகை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கன்யாஸம் கரன்யாஸம் முதலியவை இல்லாமல் செய்த ஜபம் மூக ஜபம் (ஊமை ஜபம்) எனப்படும். சரியான ஆஸனம் போட்டுக்கொள்ளாமல் செய்யும் ஜபம் ஸுப்தஜபம் (தூங்கு ஜபம்) எனப்படும். ஓம் என்னும் ப்ரணவமாகிய தலை இல்லாமலுள்ள ஜபம் அதாவது அதைச் சொல்லாமல் செய்யும் ஜபம் மிருதஜபம் (உயிர்போன ஜபம்) என்று சொல்லப்படும். பல்லவமாகிய சதுர்த்தி ஸம்போதனம்முதலியவை இல்லாமலிருந்தால் நக்ன ஜபம் (வஸ்திரமில்லாத ஜபம்) என்று சொல்லப்படும். குருவாய் சொல்லப்பட்டால் விருதா என்று சொல்லப்படும். அதிகமான அக்ஷரங்களைக்கொண்டதாயிற்றென்றால் வீரியமில்லாததாய் வீரியஹீன ஜபமாகும். அக்ஷரங்கள் குறைந்துபோய்விட்டதென்றால் ஹதஜபம் என்று ஆகும். வேகமாய் சொல்லப்பட்டதென்

ஞல் புஜங்க ஜபம் என்றாகும். விளம்பமாய் ஜபிக்கப்பட்டதென்றால் கீலக ஜபம் என்றாகும். ஒருவர் ஜபிப்பதை மற்றொருவர் சிரவணம் செய்தார் என்றால் அது சூன்ய ஜபமாகும். இந்த பத்துவகை தோஷங்களை அறிந்து இவைகள் ஏற்படாதபடி ஜபத்தைச் செய்தால் விதயுக்தமான அதற்கேற்ற பலன் கட்டாயம் உண்டாகும். அதன்படி செய்து முடித்தால் மந்திரஸித்தியும் ஏற்படும். அக்ஷமாலை கணக்கின்படி ஜபிப்பது உத்தமமாகும். ஜபமாலைவைத்து அந்த கணக்கின்பேரில் மத்யமமாகும். உள்ளவை கையிலுள்ள பர்வங்கள் அதாவது அவைகளின் கணக்கைவைத்து ஜபிப்பது அதமமாகும். விரல்விட்டு எண்ணி ஜபித்தால் நிஷ்பலமேயாகும். காயத்ரியை உள்ளங்கை கணுக்களாகிய பர்வங்களின் கணக்கைக்கொண்டாவது ஜபமாலை வைத்துக்கொண்டாவது ஜபிக்கலாம். வேதமாதாவான காயத்ரியை கைபர்வங்களின் கணக்கைக்கொண்டுதான் ஜபிக்கவேண்டுமென்று ஓர் ஸ்மிருதி விதிக்கிறது. ஸந்தியாவந்தனத்தின் அங்கமான காயத்ரிஜபத்தை கையின் பர்வங்களின்படிதான் ஜபிக்கப்படுவது சிஷ்டாசாரம். அஷ்டமகாமந்திரத்தைச் சேர்ந்த காயத்ரியை ஜபமாலையைக்கொண்டு ஜபிக்கப்படுகிறது.

**ஜபத்தின் ஸ்தானம்.** ஜபாதிகள் செய்யப்படும்பொழுது உத்தம ப்ராம்மணர்கள் வந்தால் எழுந்து அவரை நமஸ்கரித்து யோக க்ஷேமம் விசாரித்துவிட்டு பிறகு ஜபிக்கவேண்டும். ஆசாரியன் விஷ்ணு பக்தர், தேவகிருஹம், நதி முதலிய ஜலாசயம். அசுவத்த விருக்ஷம், அக்னிஹோத்ராதிகளின் அக்னி, சூரியன் இவைகளுக்கு முதுகு காட்டிக்கொண்டு ஜபிக்கலாகாது. அசுவத்த விருக்ஷம், அக்னி, பசு, நதி, பிராம்மணர்கள், தேவாலயம் இவைகளுக்கு எதிராக இருந்து ஜபித்தால் அது எந்த திக்காயிருந்தாலும் தோஷமில்லை. சூரியன், ஆசாரியன், சந்திரன், தீபம், ஜலம், பிராம்மணர்கள், பசுக்கள் இவைகளின் எதிரில் ஜபிப்பது சிலாக்யமானதாகுமென்று ஸ்மிருதிஸாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சூரியன், அக்னி, பரமசிவன் ஆகிய தேவர்களின் சன்னதியிலும் குருவின், ஸன்னதியில் இதர பரிசுத்தமானவர்களின் சன்னதியிலும் ஜபிப்பதுதான் சிலாக்யமானது. ஸ்நானம், ஸந்தியாவந்தனம், ஜபம் இவைகளைச் செய்யும்பொழுது அவைதிகர்களுடன் பேசினாலும் சரி அவர்களைத்தொட்டாலும் சரி அவர்களுக்கு இவன் செய்யும்புண்ணியத்தின் ஆறில் ஒரு பாகத்தைக் கொடுத்துவிட நேரிடுகிறது. என்று வியாஸர் அறிவிக்கிறார்.

(தொடரும்.)



# ஸ்ரீவாதிராஜஸ்வாமிகளின் சரித்திரம்.

(முன் 172-ம் பக்கம் தொடர்ச்சி.)

ஸ்ரீ வாதிராஜர் அதன் சாபத்தை நிவிருத்திக்க ப்ரியங்கொண்டிருந்தாராதலால் அன்புடன் "பிரம்மரக்ஷஸ்ஸே! போதும் நீ இவ்வளவு நாள் இந்த கோர ஜன்மத்தை அனுபவித்தது. உன்னால் துர்பலரான அனேகர் ஹிம்சிக்கப்படுகின்றனர். அவர்களின் க்ஷேமத்திற்காகவாவது உன்னை உத்தரிக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது. ஆயினும் நான் சொன்னபடி நீ கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுகிறேன். ஆகாமாவை என்பதற்கு பொருள் இது தான். ஆ என்றால் ஆசுவீஜம், கா என்றால் கார்த்திகம், மா என்றால் மாகம், வை என்றால் வைசாகம் இந்த மாஸங்களில் அருணோதய காலத்தில் எல்லா நாட்களிலாவது அல்லது அச்த்தனுயிருக்கும் பக்ஷத்தில் பௌர்ணமியிலாவது பிராத: ஸ்நானம் செய்தால் மகா புண்யம் ஏற்படுவதுடன் கோரமான ப்ரம்ம ராக்ஷஸஜன்மம் பிசாச ஜன்மம் முதலியவைகள் கூட நிவிருத்தியாகுமென்று ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. "ஆச்வினே கார்த்திகே மாகே வைசாகே ஸ்நானதத்பர: | பிரம்மராக்ஷஸபைசாசயோனேர் முக்தோ பவேத் த்ருவம்" என்பது அந்த வாக்கியம். இந்த மாதங்களின் பெயர் எப்பொழு[illegible] ஞாபகத்திலிருப்பதற்காக உனக்கு சுருக்கமாக ஆகாமாவை என்று சொல்லப்பட்டது. ஆகவே நீ இந்த மாஸங்களில் விதி பூர்வமாய் அருணோதய காலத்தில் ஸ்நானம் செய்து வா. உனக்கு சீக்கிரமே இந்த ப்ரம்ம ராக்ஷஸஜன்மம் தொலையும். நீ இனி நிரபராதிகளான ஸாமான்யர்களை ஹிம்சிப்பதை விட்டு விடு. உன் கர்மத்தைத் தொலைத்துக் கொள்வதில் கவனத்தைச் செலுத்தி வா. ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹனின் பாதத்தை ஸ்மரித்து வா. அந்த ஸ்மரணையால் பல நாளில் தீரும் கஷ்டங்கள் சீக்கிரமே தொலைந்து போகும் என்று இவ்வாறு புத்திமதியை ஸ்ரீ வாதிராஜர் பிரம்ம ராக்ஷஸத்துக்கு கூறினார். அவர் பூர்வ ஜன்மத்தில் ஸ்ரீ வா[illegible]ஜரிடம் ஸத் சாஸ்[illegible] படித்து ஞானியாயிருந்ததால் ஸ்ரீ வா[illegible]ராஜர் கூறிய[illegible]வுடனே [illegible]ராம் விருத்தாந்தமெல்லாம் ஞாபகத்திற்கு [illegible]த்தது. பெரியோரான ஸ்ரீ வாதிராஜரை அவமதித்ததால்தான் தனக்கு [illegible]ந்த ஜன்மம் வந்ததை அறிந்து, ஸ்ரீ வாதிராஜரின் பாதத்தில் விழுந்து[illegible], தன்னை அவருடைய முக்ய ஸேவகனாய் ஏற்றுக்கொள்ளும்[illegible]படி ப்ராத்தித்தார். அவர் இட்ட வேலையை எப்பொழுதும் [illegible] செய்ய காத்திருப்பதாய் அறிவித்தார்.